செய்தி வெளியீடு எண் : 289 நாள் : 06.02.2025

## ஜமைக்கா நாட்டில் உயிரிழந்த தமிழர்கள் பற்றிய விவரம்

ஜமைக்கா நாட்டின் டர்க்ஸ் மற்றும் கைகோஸ் தீவுகளில் உள்ள J.K. Food Mart Company இல், பணிப்புரிந்த தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. விக்னேஷ் என்பவர், 18.12.2024 அன்று அங்கு நடந்த கொள்ளை முயற்சியில், கொள்ளையர்களால் சுடப்பட்டு உயிரிழந்தார்.

திரு. விக்னேஷ் அவர்களின் உடலை தமிழ்நாடு கொண்டு வரக்கோரிய அவரது குடும்பத்தினரின் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் மூலம், ஜமைக்கா நாட்டிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் அவர் பணிப்புரிந்த நிறுவனம் தொடர்பு கொள்ளப்பட்டு, உயிரிழந்த திரு. விக்னேஷ் அவர்களின் உடலை தமிழ்நாடு கொண்டு வர கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு விக்னேஷ் அவர்களின் உடல் 30.12.2024 அன்று பிணக் கூராய்வு செய்யப்பட்ட நிலையில், அவருக்கான இழப்பீட்டை அவர் வேலை செய்த நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து வழங்க தமிழக அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மேலும், அன்னாரது உடலை தமிழ்நாடு கொண்டுவருவதற்கான செலவினத்தை தமிழக அரசே ஏற்கும்.

திரு. விக்னேஷ் அவர்கள் வேலை செய்த நிறுவனத்துடன், தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, நிலைமை தொடர்ந்து அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகத்தினால் கண்காணிக்கப்பட்டு, உடலை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், உடல் தமிழ்நாடு கொண்டு வரப்படும் நிலையில் விமான நிலையத்திலிருந்து, அவரது இல்லம் வரை அரசின் கட்டணமில்லா அமரர் ஊர்தி மூலம் கொண்டு செல்லப்படும்.

......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu